பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 18 திங்கட்கிழமை (4-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 8

# யாழ். நகரின் மையப் பகுதிகளுக்கு படை முன்னேறியதாக அறிவிப்பு!

## மோதல்கள் நேற்றும் தொடர்ந்தன

சாவகச்சேரி, டிசம்பர் 4

யாழ். நகரின் சில பகுதிகள் வரை முன்னேறிய ஸ்ரீலங்காப் படைகள் நேற்று நகரின் மையப்பகுதிகளை நோக்கி நகர்ந்ததாக கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

எனினும் முன்னேறும் படையினருடன் யாழ். நகரப் பகுதியில் நிலைகொண்டுள்ள விடுதலைப் புலிகள் தொடர்ந்து மோதி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரி, யாழ். கோட்டை ஆகிய பகுதிகளை தாண்டி, தென்மேற்கு நோக்கி படையினர் முன்னேறியுள்ளனர் என்றும் —

யாழ். அரச அதிபரின் வாசஸ்தலம், செயலம், சென். மேரிஸ் தேவாலயம், குருநகர் பகுதி என்பன படையினரின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளன என்றும் கொழும்பில் மேலும் அறிவிக்கப்பட்டது.

நேற்றும் நகரப் பகுதியில் ஆங்காங்கே மோதல்கள் இடம்பெற்ற போதிலும் —

முன்னைய தினங்களுடன் ஒப்பிடும்போது நேற்று மோதல்கள் குறைவாகவே இருந்தன என்று களச்செய்திகள் தெரிவித்தன.

யாழ். ஆஸ்பத்திரி, பஸ் நிலையம் ஆகிய பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டிருந்ததாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

இதற்கிடையில் —

நேற்று முன்தினம் நகரப் பகுதியில் இடம்பெற்ற சண்டையில் ஆறு படையினர் கொல்லப்பட்டதாகவும், இரு அதிகாரிகள் உட்பட 20 படையினர் படுகாயமடைந்ததாகவும் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்த சென். மேரிஸ் தேவாலயம், சென். பற்றிக்ஸ் கல்லூரி, குருமனை ஆகியவற்றில் நானூறு பொதுமக்கள் தங்கியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ-ஐ-3-6)

### வவுனியா ஊடாக வடக்கு மக்கள்

## கொழும்பு செல்வதற்கு விதிக்கப்பட்ட தடை தளர்வு?

கொழும்பு, டிச. 4

வடபகுதி மக்கள் வவுனியா ஊடாக கொழும்பு செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கில் இருந்து வவுனியா வரும் மக்கள் சில நிபந்தனைகளின் பேரில் கொழும்பு செல்ல அனுமதிக்கப்படுவர் என்று அதிகாரிகள் குறிப்பிட்டதாக அச்செய்தி மேலும் தெரிவித்தது

வடக்கில் இருந்து வவுனியா ஊடாக பயணிகள் கொழும்பு செல்வதற்கு கடந்த 28 ஆம் திகதி முதல் படையினர் தடை விதித்திருந்தனர் என்பது தெரிந்ததே.

(உ-3)

### அரச அதிபர் அறிவிப்பு

# கிளிநொச்சியில் பாடசாலைகளை விரைவில் திறக்க நடவடிக்கை!

## இடம்பெயர்ந்தோருக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன

கிளிநொச்சி, டிச. 4

கிளிநொச்சி மாவட்டத்தில் விரைவில் பாடசாலைகளைத் திறப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக அந்த மாவட்ட அரச அதிபர் திரு. எஸ். தில்லைநடராசா தெரிவித்திருக்கின்றார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்து வந்துள்ளோருக்கு வழங்கப்படும் உதவிகள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார் அவர் மேலும் கூறியதாவது:-

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம் பெயரும் எல்லோரும் முதலில் கிளிநொச்சி மாவட்டத்துக்கே வருகிறார்கள்.

கிளிநொச்சிக்கு வருவோரில் 75 வீதமானவர்கள் அங்கேயே தங்கியுள்ளார்கள்; 20 வீதமானவர்கள் முல்லைத் தீவு மாவட்டத்துக்கும் 5 வீதமானவர்கள் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கும் செல்கிறார்கள். ஒரு சிறு பகுதியினர் கொழும்பு, திருகோணமலை போன்ற இடங்களுக்கு செல்கின்றனர்.

தற்சமயம் பாதுகாப்பு காரணங்களுக்காக வவுனியாவுக்கு அப்பால் செல்வதில் சிரமம் இருப்பதால் பெரும்பாலானவர்கள் கிளிநொச்சி மாவட்டத்திலேயே தங்க விரும்புகிறார்கள்.

யாழ்ப்பாண மாவட்டம் பக்கத்து மாவட்டமாக இருப்பதும் அவர்கள் கிளிநொச்சியில் தங்குவதற்கு ஒரு காரண

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் ஒரே இரவில் 554 தமிழர்கள் கைது!

கொழும்பு, டிச. 4

கொழும்பில் பல பகுதிகளிலும் கடந்த 27 ஆம் திகதி இரவு பொலீஸார் நடத்திய திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல்களில் 554 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு பிராந்தியத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் டீ. எம். ரி. பி. திஸநாயக்கா இத்தகவலை 'திவயின' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

கோட்டை, புறக்கோட்டை, முகத்துவாரம், கொட்டாஞ்சேனை, மருதானை, கிருலப்பனை, பொரளை, தெமட்டகொடை, பம்பலப்பிட்டி, கிராண்ட்பாஸ் ஆகிய இடங்களிலேயே இத்தேடுதல் நடத்தப்பட்டிருக்கிறது.

கைது செய்யப்பட்டோரில் இளம் யுவதிகள் பலரும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ-6)

## வடக்கே செல்ல மறுத்த 40 பொலீஸாருக்கு கல்தா!

கொழும்பு, டிச. 4

வட பகுதியில் சேவையாற்றுவதற்காக அங்கு செல்வதற்கு மறுத்த 40 பொலீஸார் சேவையில் இருந்து இடை நிறுத்தப்பட்டிருப்பதாக பொலீஸ்மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுரு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையின் கீழ் சகல தரங்களையும் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் பொலீஸார் அங்கு அனுப்பப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து படையினர் மீட்டுள்ள இவ்வேளையில் அதற்கு உதவி புரிய மறுக்கும் பொலீஸார் பொலீஸ் திணைக்களத்துக்குத் தேவையில்லாதவர்களே என்றும் பொலீஸ்மா அதிபர் தெரிவித்தார். (ஐ-6)

## தினசரி கிளாலி சேவை

சாவகச்சேரி, டிச. 4

கிளாலி - பூநகரி படகுச் சேவை கடற்புலிகளின் பாதுகாப்புடன் தினசரி தொடர்ந்து நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-3)

## பெரும் எண்ணிக்கையில் கிளிநொச்சிக்கு மக்கள்!

சாவகச்சேரி, டிச. 4

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் தங்கியுள்ளவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் கிளாளியூடாக நேற்றும் கிளிநொச்சி சென்றனர்.

கிளாலியில் ஏராளமானவர்கள் தமது உடைமைகளுடன் நேற்றுக் காலையிலேயே கூடியதாகவும் —

பெரும் எண்ணிக்கையில் மக்கள் வன்னிக்குச் செல்வதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் தமக்குத் தேவையான அளவு பொருள்களை எடுத்துச்செல்ல படகு வசதி செய்யப்பட்டிருந்தது.

இடம்பெயர்ந்தவர்களின் வருகை அதிகரித்துள்ளதையடுத்து கிளிநொச்சியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனது பணியை விரைவுபடுத்தியுள்ளது என்றும் —

மக்களுக்குத் தேவையான உதவியை அவர்கள் வழங்கி வருகின்றனர் என்றும் மேலும் — தெரிவிக்கப்பட்டது.

## தமிழ் கட்சிகளைச் சந்திக்க இணங்கினார் சந்திரிகா!

கொழும்பு, டிச. 4

கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளை எதிர்வரும் 11ஆம் திகதி சந்தித்துப் பேசுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இணங்கியிருக்கிறார்.

ஜனாதிபதியின் வாசஸ்தலமான அலரி மாளிகையில் இச்சந்திப்பு இடம்பெறும்.

ஜனாதிபதியைச் சந்திக்க வாய்ப்புத்தருமாறு கோரி, தமிழ்க் கட்சிகள் விடுத்த கோரிக்கையை ஏற்று, கடந்த 14 ஆம் திகதி அச்சந்திப்பை நடத்துவதற்கு நேரம் ஒதுக்கிக் கொடுத்த ஜனாதிபதி சந்திரிகா, திடீரெனக்காலங்குறிப்பிடாது அந்தச் சந்திப்பை ஒத்தி வைத்ததாக அறிவித்ததும் —

அதற்குப் பின்னர் சந்திப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப் பகுதியில் வயிற்றோட்டம் பரவுகிறது!

## கடந்த மாதம் மட்டும் 24 பேர் மரணம்!!

தென்மராட்சி, டிச. 4
தென்மராட்சி பகுதியில் வயிற்றோட்ட நோய் பரவி வருவதாக வைத்திய வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

வயிற்றோட்டம் காரணமாக நாளாந்தம் நூற்றுக் கணக்கானோர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் இதுவரை ஆஸ்பத்திரி வார்டுகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வயிற்றோட்டம் காரணமாக கடந்த நவம்பரில் மட்டும் 24 பேர் மரணமடைந்ததாக ஆஸ்பத்திரி புள்ளி விவரங்களில் இருந்து தெரியவருகிறது.

இறந்தவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகளும், வயோதிபர்களும் ஆவர்.

பளை ஆஸ்பத்திரியில் மட்டும் கடந்த மாதம் சுமார் ஆயிரம் பேர் வயிற்றோட்ட நோய்க்குச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களே வயிற்றோட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் நெருக்கமாகத் தங்கள் குடியிருப்புகளை அமைத்துக் கொள்வது, ஒரே வீட்டில் பல குடும்பங்கள் தங்கி வாழ்வது, ஒரு மலசல கூடத்தைப் பல குடும்பத்தினர் பயன்படுத்துவது போன்ற நிலைமைகளே வயிற்றோட்டம் பரவ காரணங்களாக உள்ளன.

(ஐ-152-117)

# வடமராட்சியில் இருவர் மண் மீட்பு போரில் இணைவு

செம்பியன்பற்று டிச. 4
கரணவாய் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவரும் —

மாமுனை கிழக்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் மண் மீட்புப்போரில் பங்குபற்றுவதற்காக விடுதலைப்புலிகள் இயக்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

கரணவாய் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஆண்டு 10 மாணவரான கி. ஆனந்தக்குமார் (வயது 15), மருதங்கேணியில் உள்ள புதிய போராளிகள் இணையும் செயலகத்துக்குச் சென்று தன்னை போராளியாக இணைத்துக் கொண்டார்.

மாமுனையைச் சேர்ந்த இளைஞரான கா. காண்டீபன் (வயது 23), தனது பெற்றோரின் சம்மதத்துடன் கடந்த வெள்ளியன்று விடுதலைப்புலிகளுடன் இணைந்து கொண்டார். இவர் மாமுனை கலைமகள் சனசமூக நிலைய உறுப்பினராவார்.

(ஐ-36)

# கல்விக் கல்லூரி மாணவர் மட்டக்களப்புசெல்லவில்லை

## அனுமதியை இழக்கும் ஆபத்து

கொழும்பு, டிச. 4
மட்டக்களப்பு கல்விக் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட புதிய மாணவர்களில் வட பகுதியை சேர்ந்த 67 மாணவர்கள் இதுவரை தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவில்லை.

இடம்பெயர்ந்துள்ள இந்த மாணவர்கள் வடக்கிலிருந்து மட்டக்களப்புக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதனாலேயே அவர்கள் தங்கள் பதிவினை மேற்கொள்ள முடியாது போயுள்ளது.

இதன் காரணமாக நவம்பர் 22ஆம் திகதி அங்கு ஆரம்பமான முன் ஆயத்த பயிற்சி வகுப்புகள் இடைநிறுத்தப் பட்டுள்ளன.

இதுவரை தங்களைப் பதிவு செய்து கொள்ளாத மாணவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை பதிவை மேற்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது என்றும் —

இக்காலப் பகுதியில் அவர்கள் தங்கள் பதிவுகளைச் செய்யத்தவறினால் அந்த வெற்றிடங்களுக்காக 'காத்திருப்போர்' பட்டியலிலிருந்து புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் கல்வியியல் கல்லூரி உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்,

# யாழ்ப்பாணத்தில் விரைவில் சிவில் நிர்வாகம் வருமாம்

கொழும்பு, டிச. 4
யாழ். நகரின் பெரும் பகுதியை ஸ்ரீலங்காப் படைகள் கைப்பற்றியதை அடுத்து —

அங்கு அடுத்த சில தினங்களில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படும் என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை அறிவித்ததாக இலங்கை வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

அரச படைகள் கைப்பற்றிய பகுதியை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் முதல் கட்ட நடவடிக்கையாக யாழ்ப்பாணம் முழுவதும் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கையை மின்சார சபை எடுத்து வருகிறது என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்தது

(உ-3)

# எழுதுமட்டுவாள், பளையில் போர்க்கால கருத்தரங்கு

கலை பண்பாட்டுக் கழகத்தினரால் எழுதுமட்டுவாள், பளை பிரதேசங்களில் வீதி நாடகம், போர்க்கால கருத்தரங்குகள் என்பன நடத்தப் பட்டுவருகின்றன. ஒளிப்பதிவு படக்காட்சிகளும் காண்பிக் கப்படுகின்றன.

விடுதலைப் போராட்டத்தில் மக்கள் முழுமையாக இணைந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை விளக்கியும் —

தமிழ் மண்ணை முற்றாக ஆக்கிரமித்து மக்களை கொன்றொழிக்க பெருமளவில் படையெடுப்பு நடத்திவரும் சிங்கள இராணுவத்தை விரட்டியடிக்கும் அவசியத்தை விளக்கியும் —

வீதி நாடகங்கள், கருத்தரங்குகள், படக்காட்சிகளை கலை பண்பாட்டுக் கழகத்தினர் பரவலாக நடத்திவருகின்றனர்.

[இ-152]


## இடமாற்றம்

## ராசி சில்க்ஸ்

### (ராசி பட்டுச் சோலை)

யாழ். நவீன சந்தையில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் இன்று முதல் (4.12.95) கொடிகாமம் புகையிரத நிலையம் முன்பாக இயங்க ஆரம்பித்துள்ளது என்பதனை அன்புக்கினிய வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

(சி-3125)


## புலிகள் தாக்கலாம் என அச்சம்

# சந்திரிகாவின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது!

கொழும்பு, டிச 4
விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம் என்ற அச்சம் காரணமாக ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது வெளித் தொடர்புகள், நடமாட்டங்களைக் குறைத்துக் கொண்டிருப்பதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

கொழும்பு நகருக்குள் ஜனாதிபதியின் நடமாட்டத்தை அவரின் பாதுகாப்பு கருதி, பாதுகாப்பு அதிகாரிகள் வெகுவாகக் கட்டுப் படுத்தியிருப்பதாகவும்—

முன்கூட்டியே ஒழுங்கு செய்யப்பட்ட பல நிகழ்ச்சிகளில் ஜனாதிபதி பங்குபற்றுவது இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும்—

அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

கடந்த 20 ஆம் திகதிக்குப் பின்னர் நடைபெற்ற—

தேசிய வர்த்தக சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம், ஸ்ரீலங்கா முதலீட்டாளர் ஆணைக்குழுவின் ஜனாதிபதி—தேசிய சான்றிதழ் வழங்கும் வைபவம், பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்ற நான்காவது சர்வதேச ஆயுள்வேத மாநாடு போன்றவற்றில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள வேண்டிய ஜனாதிபதி இறுதி நேரத்தில் அந்நிகழ்ச்சிகளுக்குச் சமூகம் தராமல் ஒதுங்கிக் கொண்டார் என்று அப் பத்திரிகை சுட்டிக் காட்டியது.

(உ)

# கோப்பாய் ஆஸ்பத்திரி சாவகச்சேரியில்

கோப்பாயில் இயங்கி வந்த அரசினர் மருந்தகம் தற்போது சாவகச்சேரி வைத்தியசாலையில் — வெளிநோயாளர் பிரிவுக்கு அருகில் உள்ள மண்டபத்தில் இயங்கி வருகின்றது. இப்பிரிவிலும் அநேக பொதுமக்கள் மருத்துவ சிகிச்சையினைப் பெற்று வருகின்றனர்.

(ஐ-31)


## வாழ்நாள் படப்பிடிப்பகம்

மானிப்பாய்

மேற்படி நிலையம் தற்போது கண்டிவீதி, மிருசுவிலில் புனித நீக்கிலார் ஆலயத்திற்கு அண்மையில் இயங்குகிறது.

சகல விதமான கறுப்பு / வெள்ளை படங்கள் ஒரு மணி நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பல்லுரு கலப்பு நுட்பமூலம், கலை அம்சம் பொருந்திய புகைப்படச் சேவை

**LIFE PHOTO STUDIO**
KANDAY ROAD; MIRUSUVIL.
(Near St. Nicholas Church)

(39323)


# கொடி ஏற்றிவிட்டால் பிரச்சினை தீர்ந்து விடுமா?

## எதிரணி எம். பி. கேட்கிறார்

கொழும்பு, டிச. 4
''யாழ்ப்பாணத்தில் கொடியை ஏற்றிவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிடுமா?''

— அனுராதபுரம் மாவட்ட ஐ.தே.க. வின் எம்.பி. சந்திரா பண்டார மேற்கண்டவாறு நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

''அமைச்சர்கள் சிலர் யாழ்ப்பாணத்தல் கொடி ஏற்றுவதைப்பற்றி அறிக்கை விடுகின்றனர்; உரை நிகழ்த்துகின்றனர். இதன் மூலம் பிரச்சினைக்கு நாம் தீர்வை எட்டிவிட முடியுமா? '' — என்றும் அவர் கேட்டார்.

அரசியல் தீர்வே தற்போதைய பிரச்சினைக்குஅவசியமாகும் என்றும் அவர் கூறினார்.

(இ)


## இன்னும் நான்கு நாள்கள் மட்டுமே உள்ளன

## பெற்றோர்களே!

ஐந்து வயதுக்கு உட்பட்ட உங்கள் பிள்ளைகளுக்கு இரண்டாவது முறையாக மீண்டும் போலியோ தடுப்பு மருந்தை வழங்க ஆயத்தமாகுங்கள்

## அதற்கான நாள் எதிர்வரும் 9 ஆம் திகதி

ஊனமாக்கும் போலியோவை உலகிலிருந்து ஒழிப்போம்!


# படையினருக்கு உதவ கைதிகளை பயன்படுத்துவது குறித்து ஆராய்வு

கொழும்பு, டிச. 4
படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் அகழிகளை வெட்டுதல், மற்றும் படையினருக்கு உதவி, செய்தல் போன்ற பணிகளுக்கு சிறைச்சாலைக் கைதிகளை ஈடுபடுத்தும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் படவிருக்கிறது.

இந்த பணிகளுக்கு பெரும் எண்ணிக்கையான படையினரை ஈடுபடுத்தும் [illegible] இராணுவ நடவடிக்கை[illegible] கப்படுவதனால் சிறைக்கைதிகளை ஈடுபடுத்தும் திட்டத்தை நடை முறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

சிங்க படைப்பிரிவுத் தலைவர் மேஜர் கே. ரீ. கருணா[illegible] [illegible] பேசியுள்ளார்.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னைய ப.நோ.கூ. சங்கங்களின் கிளைகள் மூலமே உணவு, நிவாரணம்

## இடம் பெயர்ந்தோருக்கு வழங்க முடிவு

சாவகச்சேரி, டிச. 4

வலிகாமத்தில் இருந்து வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தோருக்கான உணவு மற்றும் நிவாரணப் பொருள் விநியோகத்தை அவர்கள் முன்னர் வலிகாமத்தில் வாழ்ந்த பகுதிகளுக்கான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே விநியோகிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த முடிவின்படி—

இடம்பெயர்ந்தோர் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் எங்கிருந்தாலும்—

தமது முன்னைய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்றைத் தேடிப் பிடித்து அங்கு உணவு மற்றும் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட இத்தீர்மானம் யாழ். அரச அதிபர் செ. பத்மநாதனுக்கு தெரிவிக்கப் பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

அடுத்த கட்ட நிவாரண விநியோகம் இந்த முறைப்படியே மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

# உணவு, நிவாரண விநியோக முறை; புதிய முடிவு குறித்து மக்கள் அதிர்ச்சி!

## வீண் அலைச்சலைத் தவிர்க்கும்படி கோரிக்கை

சாவகச்சேரி, டிச. 4

வலிகாமம் பகுதியிலிருந்து வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தோர், தமக்குரிய உணவு மற்றும் நிவாரணப் பொருள்களை—

தாம் முன்னர் வசித்த பகுதிக்குரிய ப. நோ. கூ. சங்கத்தின் கிளை ஒன்றைத் தேடிப் பிடித்து, அங்குதான் பெற்றுக்கொள்ளவேண்டும் என எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் இடம்பெயர்ந்த மக்களை அதிர்ச்சி அடைய வைத்திருக்கின்றது.

'சூரியப் பிரகாசம் இராணுவ நடவடிக்கைக்கு முன்னர், ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் அப்பிரதேச எல்லைக்குள் இருக்கும் ப. நோ. கூ. ச. கிளைகளில் தமது உணவு மற்றும் நிவாரணப் பொருள்களைப் பெற்று வந்தனர்.

அவ்வேளை, நிவாரணப் பொருள்கள் மற்றும் பங்கீட்டு அடிப்படையில் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகிக்கப்படும்போது ப. நோ. கூ. ச. கிளைகளில் சன நெருக்கடி ஏற்பட்டு வந்த போதிலும், தமது வீடுகளுக்கு நெருக்கமாக அக்கிளைகள் இருந்ததால் — நெருக்கடியை ஓரளவு சமாளித்து அல்லது பெரியளவில் பொருட்படுத்தாது — மக்கள் அவற்றைப் பெற்று வந்தனர்.

ஆனால் இப்போது ஒரு பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் இடம்பெயர்ந்து, சிதறிப் போய் இருக்கின்றார்கள்.

உதாரணமாக, நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உட்பட்டோர் இப்போது வடமராட்சி, தென்மராட்சி, பளை பகுதி எங்கும் சிதறி இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் வசதியாக வடமராட்சி, தென்மராட்சி, பளை என்ற பரந்த பிரதேசத்தில் தனது கிளைகளை நிறுவுவது நல்லூர் ப.நோ.கூ. சங்கத்துக்கு இயலக்கூடிய காரியமா?

இவ்வாறு இடம்பெயர்ந்த ப. நோ. கூ. சங்கங்கள் தத்தமது பிரதேச மக்களுக்கு வசதியாக அவர்கள் இடம் பெயர்ந்த பிரதேசங்கள் எங்கும் பரவலாக தமக்குத் தமக்கு என கிளைகளைத் திறந்தால் சந்திக்கு சந்தி ப. நோ. கூ. ச கிளைகள் வரும் நிலை ஏற்படும். அது சாத்தியமா?

முன்னர் வடமராட்சி, தென்மராட்சி, பளைப் பிரதேசங்களில் ஒரு பிரதேசத்தில் ஒரு ப. நோ. கூ. ச. கிளை இருந்த இடத்தில் 15 இற்கும் அதிக கிளைகள் திறக்கப்பட வேண்டியிருக்கும்.

அது சாத்தியமாகாவிட்டால் —

இடம்பெயர்ந்த மக்கள், வெகு தூரத்தில் உள்ள— தமது பிரதேச ப. நோ. கூ. ச. கிளையைத் தேடி அலைய வேண்டிய நிலை ஏற்படும்.

மக்கள் இடம்பெயர்ந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அனுருத்தவின் நண்பிக்கு படையினர் பாதுகாப்பு!

## தெற்கில் அரசியல் சர்ச்சை

கொழும்பு, டிச. 3

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையின் நெருங்கிய பெண் சினேகிதி ஒருவருக்கு அரச படைகளின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பது குறித்து தெற்கில் அரசியல் சர்ச்சை ஒன்று கிளம்பியிருக்கின்றது.

ஆள் பற்றாக்குறை காரணமாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அனுரா பண்டாரநாயக்கா போன்றோரின் மெய்ப்பாதுகாவலர்களின் எண்ணிக்கையை அரசு கணிசமான அளவு குறைத்துள்ள அதேசமயம் —

அரசாங்கத்திலோ, முப்படைகளிலோ, அல்லது சம்பந்தப்பட்ட அமைப்புகளிலோ தொடர்பற்ற ஒரு பெண்ணுக்கு துருப்புகளின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பது ஏன் என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன.

சிங்களத்தில் அழகு என்ற கருத்துடைய பெயரைக் கொண்ட இந்தப் பெண்மணி கடந்த வாரம் அரச துருப்புகளின் பாதுகாப்புடன் — முற்றாக உருமறைப்பு கண்ணாடி பொருத்தப்பட்ட — ''சிசி'' இலக்கத் தகடு பொருத்தப்பட்ட — காரில் கொழும்பு அல்பிரட் ஹவுஸ் கார்டனில் உள்ள சிகையலங்கரிப்பு நிலையத்திற்கு வந்து சென்றது பற்றிய விவரங்களை கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று விலாவாரியாக வெளியிட்டிருக்கின்றது. (உ)

### 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு

# இரண்டாவது கட்டமாக போலியோ தடுப்பு மருந்து

## எதிர்வரும் சனியன்று வழங்கப்படும்

வடமராட்சி, டிச. 4

2 ஆயிரமாம் ஆண்டுக்கு முன்னர் போலியோவை உலகில் இருந்து முற்றாக ஒழித்து விடுவது என்ற சர்வதேச றோட்டறியின் திட்டத்தின் கீழ் —

ஐந்து வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு ஒரே நாளில் போலியோ தடுப்பு மருந்தை வழங்கும் பணியின் இரண்டாவது கட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் சுகாதாரப் பகுதியினர் துரிதமாகச் செய்துவருகின்றனர்.

தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் அன்றைய தினம் இதற்கென தெரிவு செய்யப்பட்ட நிலையங்களில் வைத்து போலியோ தடுப்பு மருந்து வழங்கப்படும்.

வடமராட்சி பகுதியில் மட்டும் 53 நிலையங்களில் போலியோத் தடுப்பு மருந்து பிள்ளைகளுக்கு வழங்கப்படும் என்று பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்தார். (ஐ-173)

# செஞ்சிலுவை டாக்டர் குழு சுகாதார நிலை பற்றி ஆய்வு

சாவகச்சேரி, டிச. 4

வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்கள் எதிர்நோக்கும் சுகாதாரப் பிரச்சினைகள் குறித்து தற்சமயம் இங்கு வந்துள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மருத்துவக் குழு ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இடம் பெயர்ந்தோர்முகாம்களுக்கு சென்று அங்குள்ளவர்களின் சுகாதார நிலை, தங்கியுள்ள இடங்களில் நிலவும் சுகாதாரக் குறைபாடுகள் தொற்று நோய்ப்பாதிப்பு போன்ற விடயங்கள் குறித்து அவர்கள் புள்ளி விவரங்களுடன் தகவல்களை சேகரித்து வருகின்றனர்.

இந்த ஆய்வில் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையிலேயே இங்கு மேற் கொள்ள வேண்டிய நிவாரணப்பணிகள் குறித்து முடிவு செய்யப்படும் என்று செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# யூகோ. அகதிகள் போன்றே யாழ். தமிழர்கள் அவலம்!

## "பொஸ்ரன் குளோப்" கருத்து

நியுயோர்க், டிச. 4

இலங்கையில் தமிழர்களுக்கு நேர்ந்துள்ள துன்பங்கள் முன்னாள் யூகோஸ்லாவிய அகதிகளின் துன்பங்களைப் போன்று மோசமானவையாக உள்ளன. எனவே சர்வதேச கண்காணிப்பின் கீழ் அவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டும்

—அமெரிக்காவில் வெளியாகும் 'த பொஸ்ரன் குளோப்' என்ற பத்திரிகை இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

''இலங்கையின் தூரத்து அகதிகள்'' என்ற தலைப்பில் அதில் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கத்திலேயே இவ்வாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் வலயத்தில் செய்தியாளர்களும், புகைப்படப் பிடிப்பாளர்களும் நுழைய விடாமல் தடுக்கப்பட்டதன் காரணமாக தமிழர்களுக்கு நேர்ந்துள்ள இடர்கள் காட்டில் சத்தமின்றி வீழ்ந்த மரம் போல் ஆகிவிட்டது.

மனிதாபிமான காரணத்துக்காக சர்வதேச கண்காணிப்பின் கீழ் அவர்களுக்கு உதவிகள் வழங்கப்படவேண்டும் என்பதை அமெரிக்கா வலியுறுத்த வேண்டும் — என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## ப. நோ. கூ. சங்க உணவகம்

மட்டுவில் வடக்கு, டிச. 4

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கனகம்புளியடிச்சந்திக்கு அண்மையில் உணவகம் ஒன்றைத் திறந்துள்ளது. (ஐ-135)

# மாற்று வழியினி இல்லை மாணவா!

தேர்வு ஒன்று வந்து விட்டது
தெளிவு இலாத ஏக்க நிலையினில்
ஆர்வம் குன்றி இருக்கும் எங்களின்
அருமை மாணவச் செல்வச் சிறார்களே!

என்ன சொல்லி உங்களைத் தேற்றுதல்
என்ப தேதான் இன்றுள எம்நிலை.
சின்னப் பிஞ்சுகள் இளமை நலத்துளீர்
சிந்தை கலங்கி இருந்து தவிக்கிறீர்!

எங்களின் சொத்தாம் கல்வியை என்றுமே
இடைவி டாதுநாம் ஏற்றிப் போற்றினோம்.
மங்க விடாது மலர்த்தி அறிவினில்
மாண்பு பெற்றுமே மகிமை அடைந்தனம்.

எந்த இடரிலும் எறிகணை வீச்சிலும்;
இடிந்த கட்டடப் பள்ளித் தரையிலும்;
வந்த விமானக் குண்டு அடியிலும்
வாழத் தடைகள் விதித்த நிலையிலும்

குப்பி விளக்கில் கற்றுத் துணிந்துமே
குறைந்த வளத்திலும் நிறைவாய்த் தேர்ந்தனம்.
எப்பவும் ஈடெமக் கில்லா வகையிலே
எல்லாத் துறைதோறும் வல்லவ ராகினோம்

அந்தச் சிறப்பினைப் பார்த்துப் பொறாமலே
ஆத்திரம் கொண்டது சிங்களப் பேரினம்.
எந்த வகையிலும் எம்மை அழித்திட
எத்தனம் கொண்டொரு போரினைத் தொடுத்தது.

ஊளை யிட்டுளே நுழைந்தது நரிப்படை,
உள்ள வளங்களைக் குடித்து எங்களின்
யாழை அழித்துமே மூளையைக் கலைத்திட
யாவும் குலைந்திடும் என்று நினைத்தது.

கலைத்த போதிலும் கட்டுண் டுநிற்கிறோம்
காலம் எமக்கொரு கட்டளை இட்டது.
தொலைக்க எண்ணிய எதிரியைத் தொலைத்துமே
தாயகம் மண்ணினில் சுதந்திரம் மலர்ந்திட

நடக்கும் விடுதலைப் போரெனும் தேர்விலே
நன்றாய் பதிலடி கொடுத்து வெல்லுவோம்
அடக்க வந்தவர் சித்தி பெறாமலே
அனைத்துப் புள்ளியும் பெற்றுநாம் நிமிருவோம்

ஏற்ற தேர்வுகள் எமக்கென வைத்துமே
எல்லாத் துறைதொறும் ஏற்றமாய் வாழுவோம்
மாற்று வழியினி இல்லை மாணவா!
மனதினில் உறுதிகொண் டெழுந்துவா வென்றிட.

— ஆறுமுகநம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் நிவாரண பணி: ஐ. நா. அவதானிக்கிறது!

## அவசர செயல் திட்டமும் தயாராகின்றதாம்

நியூயோர்க் டிச. 4

போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதியில் உணவு விநியோகம், உணவு பாதுகாப்பு நடவடிக்கை ஆகியவற்றை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மற்றும் ஏனைய அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் போன்றவற்றின் நெருக்கமான அனுசரணையுடன் உலக உணவுத் திட்ட அமைப்பு உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

ரோமை தலைமையகமாகக் கொண்ட இந்த அமைப்பு இந்த விடயத்தில் விசேட கவனம் எடுத்திருப்பதாக ஐ. நா. சபையுடன் நெருங்கிய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதற்கிடையில் —

வடபகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர நிவாரணப் பணிகள் பற்றிய செயல் திட்டம் ஒன்றை ஐ. நாவின் அவசரகால செயலணிக் குழு ஒன்று தயாரித்து வருவதாகவும் —

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் நிவாரண நடவடிக்கைகள், ஏனைய அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் மற்றும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு போன்றவற்றின் நிவராணப் பணிகள் ஆகியவற்றைக் கவனத்தில் எடுத்து இந்தத் திட்டம் தயாரிக்கப்படுவதாகவும் —

இத்திட்டம் ஸ்ரீலங்கா அரசின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படும் என்றும் —

மனிதாபிமானப் பணிகளுக்கான ஐ. நா. திணைக்களம் தெரிவித்துள்ளது.

''வடக்கு யுத்தத்தில் பாதிக்கப்பட்டோருக்கு வழங்குவதற்காக சர்வதேச உதவிகள் எதையும் ஸ்ரீலங்கா அரசு கோரவில்லை. ஆனால் உதவி வழங்கும் கோரிக்கைகள் முன் வைக்கப்படுமானால் அவை பரிசீலிக்கப்படும் என்று மட்டும் ஸ்ரீலங்கா அரசு சமிக்ஞை காட்டியுள்ளது''. — என்று மனிதாபிமானப் பணிகளுக்கான ஐ. நா. திணைக்களம் மேலும் தெரிவித்தது.

வடபகுதிக்கான நிவாரண விநியோகங்களைச் செய்வதற்கும் அதற்கான பொருள்களை எடுத்துச் செல்வதற்கும் ஸ்ரீலங்கா அரசின் நிவாரணப் பணிக்கான அலுவலகத்திடம் அனுமதி பெற வேண்டிய அதே சமயம், இராணுவ அதிகாரிகளிடம் இருந்தும் அனுமதி பெறவேண்டியிருப்பதாக அது சுட்டிக்காட்டியது.

சவர்க்காரம் போன்ற — உணவுப் பொருள் அல்லாத— ஏனைய நிவாரணப் பொருள்களை பாதிக்கப்பட்ட வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதிகோரி சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு கடந்த இரு வாரங்களுக்கு மேலாகப் பதில் தரப்படவில்லை என சில அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் தெரிவித்திருப்பதாகவும் மனிதாபிமானப் பணிகளுக்காக ஐ. நா. திணைக்களம் சுட்டிக்காட்டியது.

ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினை விடயத்தில் — அங்கு மனிதாபிமான உதவிப் பணி அவசரமாகத் தேவைப்பட்டாலும் கூட — அந்த நாட்டு அரசாங்கத்தின் அனுமதியின்றி — ஐ. நா. சபையோ அல்லது வேறு நிவாரண ஏஜென்ஸிகளோ தலையிடுவதற்கு உரிமை இல்லை என்று ஸ்ரீலங்கா அரசு மீண்டும் வலியுறுத்தியுள்ள அதே சமயம் —

ஸ்ரீலங்கா நிலைமையை தொடர்ந்து உன்னிப்பாக அவதானிப்பது என ஐ. நா. முடிவு செய்திருக்கின்றது.

சோமாலியாவிலும் யூகோஸ்லேவியாவிலும் அந்நாட்டு அரசாங்கங்களின அனுமதியைக் கோராமலேயே அந்நாட்டு விடயங்களில் ஐ. நா. அண்மையில் தலையிட்டது குறிப்பிடத்தக்கது.

— இவ்வாறு ஐ. நா. சபையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

(உ)

---


## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பூச்சி நீக்கப்பட்ட பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பி. சிறீகரன் C O P. சின்னத்துரை, கற்குளி வடக்கு சாவகச்சேரி.
(39321)

### வியாழ மாற்றம்

6 - 12 - 95 ராகு, கேது வியாழன் மாற்றங்கள் ரூ.10/- எங்கும் விற்பனையாகின்றது. (நூலாசிரியர் சத்யா) வியாபாரிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளுமிடம் பரம் ஸ்ரோர்ஸ், பஸ் நிலையம், சாவகச்சேரி.
(39438)


## ஆஸ்பத்திரிக்கு குளிர்சாதன பெட்டி

தென்மராட்சி, டிச. 4

கொடிகாமம் மிருசுவில் அரச வைத்தியசாலைக்கு குளிர்சாதனப் பெட்டி ஒன்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் வழங்கப்பட்டுள்ளது.
(ஐ-117)

## கிளிநொச்சியில் கூடும் மழை

கிளிநொச்சி மாவட்டத்தின் பல இடங்களிலும் கடந்த சில நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது.

குடா நாட்டில் இருந்து இடம்பெயர்ந்து அங்கு சென்றுள்ள மக்கள் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

---

உணவு,...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவலப்படும் இவ்வேளையில் —

நிவாரணப் பொருள்கள் மற்றும் உணவு, அத்தியாவசியப் பொருள்கள் மக்களுக்கு அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில், மக்களை இவ்வாறு அலைய விடலாமா?

ப. நோ. கூ. சங்கங்களின் நெறியாளர் சபை, ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள், கூட்டுறவுப் பிரிவு அதிகாரிகள், யாழ் செயலக அதிகாரிகள் ஆகியோரிடம் பொதுமக்கள் முன் வைக்கும் கேள்வி இதுதான்.

இடம்பெயர்ந்து அவலப்படும் மக்களை மேலும் சிரமப்பட வைக்காமல் செய்வதற்கான தீர்வை இந்த விடயத்தில் கண்டுபிடிப்பது அவர்களின் பொறுப்பு எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.
(உ-3)

---


## சாவகச்சேரி நகர சபை

### 1996 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

01 - 01 - 1996 தொடக்கம் 31 - 12 - 1996 வரையிலான காலப் பகுதியில் கீழ்க் குறிப்பிடப்படும் வியாபாரம் / சேவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 21 - 12 - 1995 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| விவரம் | கடை இல. | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| **வியாபாரம்** | | | | |
| 1. சாவகச்சேரி நகரசபை பொதுச் சந்தை (சபையால்மாதாந்தம் அறவிடப்படும் கடை, ஊடு வாடகை நீங்கலாக) | | 2,93,480-00 | 1,500-00 | 500-00 |
| 2. சாவகச்சேரி நகரசபை மீன் சந்தை (சபையால் மாதாந்தம் அறவிடப்படும் கடை வாடகைகள் நீங்கலாக) | | 73,810-00 | 1,500-00 | 500-00 |
| 3. ஆட்டிறைச்சிக் கடை | என்.எம்.எஸ். 1 | 61,710-00 | 1,000-00 | 500-00 |
| 4. ஆட்டிறைச்சிக் கடை | என்.எம்.எஸ். 2 | 74,140-00 | 1,000-00 | 500-00 |
| 5. மாட்டிறைச்சிக் கடை | என்.எம்.எஸ். 3 | 66,110-00 | 1,000-00 | 500-00 |
| 6. மாட்டிறைச்சிக் கடை | என்.எம்.எஸ் 4 | 67,760-00 | 1,000-00 | 500-00 |
| 7. வாகனம் நிற்பாட்டும் இடங்களில் குத்தகை அறவிடுதல் | | 14,850-00 | 1,000-00 | 500-00 |
| **சேவைகள்** | | | | |
| 8. குப்பை கூளங்களை அகற்றி இரட்டை மாட்டு வண்டி / உழவு இயந்திரம் பெட்டி உட்பட வாடகைக்கு வி[illegible]தல் | | | 1,000-00 | 500-00 |

மேற்படி வைப்புப் பணம் கேள்விப் படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 18-12-1995 ஆம் திகதி 12-30 மணிவரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டா. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும். மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாக செலுத்தப்படல் வேண்டும். இது சம்பந்தமான ஏனைய விவரங்ககளை அலுவலகத்தில் அலுவல நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சி, நடராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
01 - 12 - 95.

(சி-2902)


## விமான நிலையங்களுக்கு இந்தியாவில் பாதுகாப்பு

கொழும்பு, டிச. 3

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை ஸ்ரீலங்காப் படைகள் தீவிரப் படுத்தியிருப்பதை அடுத்து—

இந்தியாவின் சகல விமான நிலையங்களும் உஷார் படுத்தப்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்திருக்கிறது.

யாழ்ப்பாணம் மீதான ஸ்ரீலங்காப் படைகளின் நடவடிக்கைகளுக்கு இரகசிய முறையில் இந்தியா உதவி வருவதாகக் கருதும் விடுதலைப் புலிகள்— யாழ். நடவடிக்கைக்கு பதிலடியாக இந்தியாவின் முக்கிய கேந்திர நிலையங்களைத் தாக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையில்—

புதுடில்லி மற்றும் கேந்திர நிலையங்களின் பாதுகாப்பு குறித்து கடந்த திங்களன்று இந்திய உள்துறை அமைச்சின் செயலாளர் கே. பத்மநாபையா தலைமையில் இந்திய உயரதிகாரிகள் கூடி ஆராய்ந்தனர்.

—இவ்வாறு அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.
(உ)

---


## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**E. K. சண்முகநாதன்**
(ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர்)

அன்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து இறையடி சேர்ந்து பத்து ஆண்டு களானாலும் உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(39304)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மலையாக உறுதி வேண்டும்

யாழ்ப்பாண நகரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் அரசினால் நடத்தப்படும் சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் முதல் நாற்பது நாள்களில் மட்டும் ஐம்பது கோடி ரூபாவுக்கும் அதிகமாகச் செலவிடப்பட்டுள்ளதாம்.

யாழ்ப்பாணத்துக் தமிழ் மக்களைக் கொன்று ஒழிப்பதற்காகவும், அவர்களின் கலாசார, பண்பாட்டு மத விழுமியங்களின் சின்னமாக விளங்கும் நகரை அழிப்பதற்காகவுமே நாளாந்தம் ஒன்றே கால்கோடி ரூபாவை அரசு செலவிட்டிருக்கிறது.

அவை மட்டுமல்ல. யாழ்ப்பாணத்து மக்களின் கோடானு கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை நாசம் செய்வதற்கும் (சூறையாடியவற்றின் பெறுமதி வேறு) நாளாந்தம் ஒன்றே கால் கோடி ரூபாவை அரசு செலவிட்டிருக்கிறது. அத்தோடு அழிவு நிற்கவில்லை. யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களின் பொருளாதாரம் அடியோடு சாய்த்து வீழ்த்தப்பட்டிருக்கிறது—

நீண்ட குண்டு வீச்சுக் குழாய்கள் பலவற்றைக் கொண்ட யுத்த டாங்கிகள் யாழ்ப்பாண மண்ணில் வளர்ந்த பெருமரங்களையும் லட்ச ரூபா செலவில் கட்டப்பட்ட வீடுகளையும் சாய்த்து, இடித்து விழுத்தியதுபோல.

அரசாங்க இராணுவம் எறிகணை வீசியும், குண்டு போட்டும் டாங்கிகள், பீரங்கிகளினால் தகர்த்தும் அழித்த யாழ்ப்பாணத்தை மீண்டும் நிர்மாணிப்பதற்கு, புனர் நிர்மாணம் செய்வதற்கு, கோடி கோடியாகப் பணம் தேவை.

நாளொன்றுக்கு ஒன்றே கால் கோடி ரூபாவைச் செலவிட்டு இவ்வளவு பேரழிவை உண்டாக்கியமை, ஸ்ரீலங்கா இராணுவம் செய்த சாதனை என்றே அரசு பாராட்டும். இறால் போட்டுச் சுறாப் பிடிக்கும் திறமை தனது இராணுவத்துக்கு உண்டு என்று மெச்சும்.

தமிழ்மக்களுக்கும், தமிழ் மண்ணுக்கும் குறைந்த செலவில் இழைக்கப்படும் பேரழிவையும் நாசகாரத்தையும் விளைவிக்கும் இந்தப் போரினூடாகவே சமாதானத்தை நிலைநாட்டப் போவதாகச் சந்திரிகா கூறினார்: இப்போதும் கூறுகிறார்.

தமிழர்களுக்கு இத்தனை இழப்புகளையும் உண்டாக்கிய யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் ''றிவிரச'' நடவடிக்கையின் மூலம் சிங்கள மக்களிடம் சரிந்துபோன ஆதரவை நிமிர்த்துவதும் போரினூடு சமாதானம் கோஷத்தின் நோக்கம்

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதைக் காட்டி, அதன் மூலம் இனவாதத்தை ஊட்டி, சிங்களவர்களுக்கு உருவேற்றிவிட்டு பொதுத் தேர்தலை (வடக்கு, கிழக்கைத் தவிர்த்து) நடத்துவதும் சந்திரிகாவின் இன்னொரு இலக்கு.

நாடாளுமன்றில் தமிழர் ஆதரவு தேவைப்படாத சிங்களப் பெரும்பான்மை கிடைத்துவிட்டால் தான் நினைத்தவாறு தமிழர்களை காலுக்குக் கீழ் போட்டு நசுக்கலாம் என்பது அவரது கற்பனைகளில் ஒன்று.

அந்தக் கற்பனை கனவாகவே கலைந்து போகவேண்டுமெனில், தமிழர்களின் விடுதலை வேட்கையும், மன உறுதியும், வீரமும் மலையாக நிலை குலையாது, திடமாக, திண்மமாக நிற்கவேண்டும்.

# சாவகச்சேரி, மந்திகை, ஆஸ்பத்திரிகளை சூழ்ந்த பிரதேசங்களைப் பாதுகாப்பு வலயங்களாக்குக!

## அரசுக்குக் கோரிக்கை

கொழும்பு, டிச. 4

சாவகச்சேரி, மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிகள் அமைந்துள்ள பிரதேசங்களை பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனம் செய்யும்படி அரசுக்குக் கோரிகை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கில் மேற்கொள்ளப்படவேண்டிய அத்தியாவசியப் பணிகள் குறித்து ஆராய்வதற்காக கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றக் கட்டடத்தில் நடந்த கூட்டத்தில் இந்தக் கோரிக்கையை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன் வைத்தனர்

இக்கூட்டத்துக்கு தலைமை வகித்த புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம.எச். எம். அஷ்ரப் இந்த விடயம் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புடையது என்றாலும் கொள்கையளவில் இதனை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார்.

இத்தகைய பாதுகாப்பு வலயங்கள் பிரகடனம் செய்யப்படுவது அவசியம் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான பிரதித் தலைவர் போல் புறுப்பும் தெரிவித்துள்ளார். (உ-3)

## கொலன்னாவை பகுதிக்கு இளைஞர் படைப் பிரிவு

கொழும்பு, டிச. 3

நீர், மின்சாரம், எரிபொருள் ஆகிய மூன்றையும் நாட்டிற்கு விநியோகிக்கும் கொலன்னாவை பகுதியின் பாதுகாப்புக்கு இருநூறு இளைஞர்களைக் கொண்ட பாதுகாப்புப் படைப் பிரிவு ஒன்றை அமைக்கும் யோசனையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஊறுகொடவத்தை எண்ணெய், எரிவாயு களஞ்சியம், கொலன்னாவை எண்ணைக் களஞ்சியம், களனி திஸ்ஸ மின் நிலையம், அம்பத்தலை நீர் இறைப்பு நிலையம் மற்றும் நீர்த்தேக்கங்கள் என்பன கொலன்னாவைத் தொகுதியிலேயே அமைந்துள்ளன.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உ. பெனட் குரேயினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த யோசனையின்படி இந்த இளைஞர் பாதுகாப்பு படைக்கு இருநூறு இளைஞர்கள் சேர்க்கப்பட இருப்பதாகவும்— அவர்கள் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து பணிபுரிவர் என்றும் 'லக்பிம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

நெருக்கடி ஏற்படும்போது அவசர சுற்றிவளைப்பு படைப் பிரிவு ஒன்றும் அமைக்கப்படவுள்ளது (ஐ)

## கல்விப் பேரவை ஒன்றுகூடல்

தமிழீழக் கல்வி மேம்பாட்டு பேரவையின் ஒன்றுகூடல் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி நூல்நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தற்போதைய கல்வி நிலை, மாணவர், ஆசிரியர்கள், கல்வியாளர்கள். பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கலூரி, பிற கல்வி நிலையங்களின் ஆளணியினர், தொண்டர் ஆசிரியர்கள் (கல்விக் கழகம்) ஆகியோரின் நிலைப்பாடுகள் மற்றும் ஊதியம், ஓய்வூதியம், அதிபர், ஆசிரியர்கள் ஓய்வு பெறல் ஆகிய முக்கிய பல விடயங்கள் பற்றி இந்த ஒன்றுகூடலில் விரிவாக ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட இருப்பதால் பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் அதில் கலந்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ)

## கொழும்பில் தமிழ்ப் பெண்கள் எண்மர் கைது

கொழும்பு, டிச. 4

கொழும்பு கொட்டாஞ்சேனை மேட்டில் அமைந்துள்ள தனியார் ஆடை தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் எட்டு தமிழ் பெண்கள் புறக்கோட்டைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மேலிடத்தில் இருந்து கிடைத்த உத்தரவையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலீஸ் பொறுப்பதிகாரி தெரித்துள்ளார். (ஐ)

## பட்டாசு வாங்கப் பணம்; தமிழரை மிரட்டி வசூலிப்பு!

### கம்பளையில் சம்பவம்

''பாதுகாப்புப் படையினர் யாழ்ப்பாணத்தைப் பிடிக்க இன்னும் 2 கிலோ மீற்றர் தூரமே உள்ளது. அதனை நாம் பட்டாசு கொளுத்தி கொண்டாட வேண்டும்'' — என்று கூறியவாறு கடந்த வாரம் கம்பளை நகரில் உள்ள தமிழ் வர்த்தகர்களின் கடைகளுக்குள் புகுந்த கும்பல் ஒன்று மிரட்டிப் பணம் வசூலித்துள்ளது.

பணம வழங்கத் தவறிய வர்த்தகர்களை அக் குழுவினர் எச்சரித்துள்ளனர் — என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

## காலநிலை சீரின்மையால் பொருள் இறக்கும் வேலை பருத்தித்துறையில் பாதிப்பு

கடற்கொந்தளிப்பு காரணமாக பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் பணி தாமதமடைந்து வருகிறது.

இதனால் ''குமண'' கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவது நேற்றுப் பாதிக்கப்பட்டது. பொருள்களை இறக்கி முடித்துவிட்டு ''குமண'' கொழும்பு திரும்புவதும் இதனால் தாமதமடையவுள்ளது.

இதேவேளை —ஒருதொகுதி நிவாரண உணவுப் பொருள்களுடன் ''லங்கா கல்யாணி'' கப்பல் இன்று அல்லது நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-173)

## கொழும்பு நகரில் மாலையில் வீதித்தடை!

கொழும்பு, டிச. 4

கொழும்பில் முக்கிய தலைவர்கள் பிரமுகர்கள் மற்றும் படைத் தளபதிகள் தங்கியுள்ள வீடுகளுக்கு முன்பாக உள்ள வீதிகள் தினசரி மாலை 6 மணியானவுடன் போக்குவரத்துக்கு தடை செய்யப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

காலி வீதியில் ஜனாதிபதி சந்திரிகாவின் வாசஸ்தலத்துக்கு முன்பாகவும், பின்புறமாகவும் அமைந்துள்ள வீதிகள் மாலை 6 மணியுடன் போக்குவரத்துக்கு மூடப்படுவதாகவும்—

பாதுகாப்புடன் சம்பத்தப்பட்ட அதிகாரிகள், மற்றும் தளபதிகளுக்கு ஒரே பகுதியில் வீடுகள் ஒதுக்கப்பட்டு அங்கு பலத்த பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தலாலேயே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## விவசாயிகளுக்கு உரம் விநியோகம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தென்மராட்சிப் பிரிவில் உள்ள காலபோக நெற் செய்கையாளர்களுக்கு 50 கிலோ ரீ. டீ. எம் பசளையையும் 10 கிலோ பொட்டாஸ் பசளையையும் வழங்கி வருகின்றனர்

விவசாய அடையாள அட்டை வைத்துள்ள — 95 ஆம் 96 ஆம் ஆண்டுகளான வரி செலுத்தியோருக்கே இந்த பசளைகள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# யாழ். மக்களின் ஒட்டுமொத்த இடம்பெயர்வு சந்திரிகாவின் தந்திரோபாயத்துக்கு சாவுமணி!

## வெரித்தாஸ் வானொலி கருத்து

மணிலா, டிச. 4

யாழ்.மக்கள் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்து சென்ற வரலாற்று நிகழ்வானது சந்திரிகா அரசின் தந்திரோபாயத்துக்கு சாவுமணி அடித்துள்ளது.

வெரித்தாஸ் வானொலி இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளது.

அந்த வானொலியில் இலங்கை நிலைமை தொடர்பாக ஒலிபரப்பான 'உண்மையின் எண்ணங்கள்' நிகழ்ச்சியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதன் சில பகுதிகள் வருமாறு: –

உலகப் பண்பாட்டு மையம் பாரிஸ்; தாய்த் தமிழ்நாட்டின் பண்பாட்டு மையம் மதுரை; அதேபோன்று ஈழத்தின் தமிழ் கலாசார பீடம் யாழ்ப்பாணம்.

விடுதலைப்புலிகளை ஒடுக்கி விடலாம்; மண்ணைக் கயிறாகத் திரித்துவிடலாம்; வானத்தை வில்லாக வளைத்து விடலாம் என்று எண்ணிக்கொண்டு இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியுள்ளது.

பெரும் எடுப்பில் யாழ்ப்பாணம் மீது நடத்தப்படும் படையெடுப்பு சந்திரிகா அரசின் இராணுவ அரசியல் குறிக்கோளைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது.

லட்சக்கணக்கான அப்பாவி தமிழர்கள் தங்கள் குழந்தை குட்டிகளுடன் கட்டாந்தரைகளில் உறங்குகின்றனர். அவர்களின் வயிற்றுக்குள் உறங்க மறுக்குறது பசி.

கண்ணீரில் நனைந்து நிற்கும் இம்மக்களை கொட்டும் மழையும் நனைக்கிறது; கொடிய நோய்களும் தாக்குகின்றன.

ஆயினும் விடுதலைப்புலிகளால் [illegible] தொந்தரவு என்பதை மக்களின் இடம்பெயர்வு உலகுக்கு காட்டிவிட்டது.

யாழ். மக்கள் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்து சென்ற வரலாற்று நிகழ்வானது சந்திரிகா அரசின் தந்திரோபாயத்துக்கு சாவுமணி அடித்துள்ளது.

அரசின் போர் நடவடிக்கையும், அதற்கு அரசு கற்பிக்கும் அபத்தமான காரணத்தையும் யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் ஏகமனதாக நிராகரித்துவிட்டனர் என்பதையே இந்த இடம்பெயர்வு எடுத்துக்காட்டியுள்ளது.

இராணுவ முற்றுகையில் இருந்தும் அதன் பின்னணியில் உள்ள அரசியல் பொறியில் இருந்தும் மக்கள் பாதுகாப்பாகத் தப்பியிருப்பது ஆறுதலைத் தருகிறது.

விதண்டாவாதத்துக்காக முழு ஈழத்தையுமே இராணுவம் கைப்பற்றிவிடுவதாக வைத்துக்கொண்டாலும் கெரில்லா படையணியான விடுதலைப்புலிகள் காடுகளுக்குள் சென்றுவிடுவர்.

இராணுவத்தின் இந்த தற்காலிக வெற்றி நிரந்தர தோல்விக்கு வழிவகுத்துவிடும்.

இராணுவத்தின் தாக்குதல்களால் உறவினர்களையும், உடைமைகளையும் இழந்துவிட்ட தமிழர்கள் மனம் உடைந்துபோவர்.

மீண்டும் அந்த மனங்கள் தாமாகவே மலர்ந்து இலங்கையின் பிரஜைகளாக வாழ எப்படிச் சம்மதிக்கும்?

இலங்கையின் பொருளாதாரத்துக்கும், கலாசார வாழ்வுக்கும் தமிழ் இனத்தின் பங்கு மகத்தானதும், மகோன்னதமானதுமாகும்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பும் பல்வேறு வகைகளில் தமிழர்கள் ஒதுக்கப்பட்டனர். அவர்களின் பிள்ளைகளே இன்று ஆயுதம் ஏந்தியுள்ளனர். — என்று அதில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் இல்லாத நகரை கைப்பற்றி என்ன பயன்?

## எதிரணித் தலைவர் ரணில் கேட்கிறார்

கொழும்பு, டிச. 4

யாழ்ப்பாண நகரத்தை இராணுவம் கைப்பற்றியது ஒன்றும் பெரிய விடயமல்ல என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றுத் தெரிவித்தார்.

மிகப்பெரும் பணத்தை செலவிட்டு மக்கள் இல்லாத நகரத்தையே இராணுவம் கைப்பற்றப் போகிறது. அதனால் என்ன பயன்?—என்றும் திரு. ரணில் விக்கிரசிங்கா கேட்டதாக இந்திய வானொலி தெரிவித்தது. (அ)

# கோட்டையில் கொடியேற்றம்

கொழும்பு, டிச. 4

யாழ். கோட்டையை ஸ்ரீலங்காப் படைகள் கைப்பற்றியதை அடுத்து அங்கு சிங்கக் கொடி ஏற்றப்பட்டதாக கொழும்பு செய்தி நிறுவனங்கள் அறிவித்தன. (உ-3)

### யாழ்.நகரை தக்கவைத்துக் கொண்டு

# படையினர் தொடர்ந்தும் தாக்குப் பிடிப்பார்களா?

## இராணுவ விமர்சகர்கள் ஐயம்

கொழும்பு, டிச 4

விடுதலைப் புலிகள் மறைமுகமாகச் சேமித்து வைத்துள்ள படைபலத்தின் முன் படையினர் தொடர்ந்து தாக்குப் பிடிப்பார்களா என்பது சந்தேகமே.

இராணுவ விமர்சகர் ஒருவர் இவ்வாறு ஐயம் தெரிவித்திருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

யாழ். நகரைத் தங்கள் வசம் வைத்துக் கொண்டு அடுத்த கட்டமாக புலிகளின் படைபலத்துக்கு இணையாக நின்று கொண்டு போர் புரியக் கூடிய தகுதியும் திறமையும் இராணுவத்திடம் இருக்கிறதா என்பது ஐயமே என்று ஆய்வாளர்கள் கூறுவதாகவும் —

கடற்புலிகள் இன்னும் அமைதியாக இருப்பது ஏன் என்பது தமக்குப் புரியவில்லை என்று மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் அச்சம் தெரிவித்திருப்பதாகவும் 'வெரித்தாஸ்' மேலும் தெரிவித்தது.

# யுத்தகால நெருக்கடியில் நாம் வாளாவிருப்பதா?

## போரில் இணைந்தவர் கூறுகிறார்

செம்பியன்பற்று, டிச. 4

இன்று தமிழீழம் முழுவதுமே யுத்தகால அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இளைஞர்களாகிய நாங்கள் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருக்க முடியுமா?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட மாமுனையைச் சேர்ந்த காண்டீபன் என்ற இளைஞர்.

மண்மீட்புப் போரில் பங்கு கொள்வதற்காக விடுதலைப் புலிகளுடன் தன்னை இணைத்துக்கொண்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமக்கு ஒரு நாடு வேண்டும். அதற்காகப் போராடுவதைத் தவிர இப்போது வேறு வழியில்லை.

நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு முடிவு கட்ட இந்த தேசியக் கடமையைச் செய்வதே எம் முன் உள்ள ஒரே வழி.

நான் முழு மனத்துடனேயே — எனது பெற்றோரின் பூரண சம்மதத்துடனேயே — போராட்டத்தில் இணைகிறேன்.

எனது தங்கை ஏற்கனவே ஒரு போராளி ஆவார். அதை எண்ணி எப்போதும் மகிழ்ச்சியடைகிறேன்.

நாளை எம் தேசம் விடியும் என்ற நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கையுடனேயே போரில் இணைகிறேன் — என்றார். [ஐ-36]

# ஜனாதிபதி பயணம் செய்ய ஒரே நிறத்தில் 7 கார்கள்

கொழும்பு, டிச. 4

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் தற்போது புதிய நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி வெளியே செல்லும் போது அவரது சகாக்கள், பாதுகாப்பு அதிகாரிகள் சகலரும் தொடராகச் செல்லும் ஏழு கார்களில் ஜனாதிபதியுடன் பயணம் செய்கின்றனர்.

இந்த ஏழு கார்களும் ஒரே இனத்தைச் சேர்ந்த ஒரே இலக்கம் கொண்ட, ஒரே நிறக் கார்கள் ஆகும்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையும் இதேபோன்றே ஒரே மாதிரியான மூன்று கார்களில் பயணம் செய்கிறார்.

ஜனாதிபதியும், அமைச்சர் அனுருத்தவும் எந்தக் காரில் பயணம் செய்கிறார்கள் என்பது தெரியாமல் இருப்பதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம் (ஐ)

### கிளிநொச்சியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகும். நிலைமை வழமைக்கு திரும்பியதும் மீண்டும் தமது மாவட்டத்துக்கு செல்லலாம் என்று அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இடம்பெயர்ந்து வருபவர்களுக்கு முதலில் சமைத்த உணவே வழங்குகிறோம்.

இருபகுதியாக மக்களை வகைப்படுத்துகிறோம்.

12 வயதுக்கு உட்பட்டவர்களை ஒரு பிரிவாகவும், அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களை வேறொரு பிரிவாகவும் வகைப்படுத்துகிறோம்,

12 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு சமைத்த உணவு வழங்க தினசரி 15 ரூபாவும், அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு தினசரி 25 ரூபாவும் செலவிட அரசு'அனுமதித்துள்ளது.

கிளிநொச்சியில் போதியளவு அரிசி உள்ளது ஆனால் மரக்கறி விலை சற்று உயர்ந்துள்ளது.

இடம் பெயர்ந்தோருக்கு உலர் உணவு வழங்குகிறோம்; அரிசி, மா, சீனி, பருப்பு, போன்றவற்றை தற்போது விநியோகிக்கிறோம். இதற்கு அரசு அனுமதி தந்துள்ளது.

இதற்கு மேலாக அரச சார்பற்ற அமைப்புக்கள் தரும் பால், பிஸ்கட் ஆகியவற்றையும் விநியோகிக்கிறோம்.

இடம் பெயர்ந்து வந்தவர்களில் வசதியான வாழ்க்கை நடத்தியவர்கள், வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்ந்தவர்கள் என்று பல தரப்பட்டவர்கள் வந்துள்ளனர்.

அரச சார்பற்ற அமைப்புகள் தேவையான பொருள்களை வழங்க தயாராக இருக்கின்றன.

தற்போது பாடசாலைகளில் தங்கியுள்ளவர்களுக்கு அரச காணிகளில் தற்காலிக முகாம்களை அமைக்க திட்டமிட்டுள்ளோம்.

இடம்பெயர்ந்து வந்துள்ளவர்களில் பெரும்பாலானோர் தமது பிள்ளைகளின் கல்வியைப் பற்றியே யோசிக்கிறார்கள்.

வெகு விரைவில் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்பது அவர்களது விருப்பமாக இருக்கின்றது.

நலன்புரி நிலையங்களை தற்போது பாடசாலைகளிலேயே அமைத்துள்ளோம். வெகு விரைவில் பாடசாலைகள் திரும்ப ஆரம்பிக்கப்பட வேண்டும்.

எனவே பாடசாலைகளை அண்டிய பகுதிகளில் — அரச காணிகளில் — நலனோம்பு முகாம்களை அமைத்தால், பாடசாலைகளை ஜனவரி மாதத்திலாவது மீள ஆரம்பிக்கலாம் என நினைக்கிறேன். இதை அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனத்தில் எடுக்கவேண்டும்—

இடம்பெயர்ந்தோருக்கு உரிய தொழில் வசதிகளை வழங்குவதற்காக சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் சொந்தக் காலில் நிற்பதற்கு உதவவிருக்கிறோம்.— என்றார். (உ-3)

### தமிழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புக்கு நேரம் ஒதுக்குமாறு தமிழ்க் கட்சிகள் சார்பில் அடுத்தடுத்து பல தடவைகள் கோரிக்கைகள் விடுக்கப் பட்டும் அவற்றுக்கு பதிலளிக்காமல் ஜனாதிபதி செயலகம் இழுத்தடித்து வந்ததும் —

குறிப்பிடத் தக்கவையாகும்

ஒருவாறு தற்போது தமிழ்க் கட்சிகளை சந்திப்பதற்கு ஜனாதிபதி நேரம் ஒதுக்கியிருக்கின்றார்.

தற்போதைய வடபகுதி நிலை குறித்து இச்சந்திப்பில் ஆராயப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3)

# டிராக்டர் கண்ணியில் சிக்கியது!

கொழும்பு, டிச. 4

யாழ். நகரப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் பயணம் செய்த உழவு இயந்திரம் ஒன்று கண்ணி வெடியில் சிக்கியதில் அதிகாரி உட்பட ஆறு படையினர் காயமடைந்தனர்.

உழவு இயந்திரத்தின் சாரதி கொலலப்பட்டார் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (ஐ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 4-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மரண அறிவித்தல்கள்

## சி. நா. மதியாபரணம் (J. P)

நயினாதீவு

[ஸ்ரீ நாகபூஷனி அம்மன் ஆலய அறங்காவலர் சபை உறுப்பினரும் முன்னாள் தலைவரும்]

நயினாதீவு 8ம் வட்டாரம் சி. நா. மதியாபரணம் (J. P) அவர்கள் 29-11-95 புதன்கிழமை நயினாதீவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகமுத்து தம்பதிகளின் புதல்வரும், நாகலெட்சுமியின் பெறாமகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பதிகளின் மருமகனும், யோகம்மாவின் அன்புக் கணவரும், பத்மசோதி, மஞ்சுளாதேவி [ஜேர்மனி], அம்பிகைபாகன் (கிராம சேவை அலுவலர் - நயினாதீவு), பரிமளாதேவி (ஆசிரியை நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்டமகாவித்தியாலயம்), புஸ்பாகரன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகநாதன் (கமநல பெரும்பாக உத்தியோகத்தர்), கருணாநிதி (ஜேர்மனி), நகுலேஸ்வரி (பிரதேச செயலகம் - நயினாதீவு), குருச்சந்திரன் (பிரதேச சபை வேலணை), ரமணி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், முத்தையா, சண்முகநாதன், நாகராசா, மகேஸ்வரி, பரமேஸ்வரி, கனகாம்பிகை (கனடா), ஜெகதாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இலக்குமியம்மா (சோதிமணி), தங்கம்மா, அமுதவல்லி, காலஞ்சென்ற மார்க்கண்டு, காலஞ்சென்ற முருகேசபிள்ளை, சந்திரசேகரம் (கனடா), பரமலிங்கம், காலஞ்சென்ற பாலசிங்கம், மயில்வாகனம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), கனகரெத்தினம் (ஓய்வு பெற்ற இலிகிதர்), செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-11-95 வியாழக்கிழமை நயினாதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. நா. முத்தையா (தமையன்)
சு. மயில்வாகனம் (மைத்துனர்)

தற்காலிக முகவரி:
விழுவளை,
எழுதுமட்டுவாள்.

[39449]

## திருமதி இளையவர் பொன்னாச்சி

(ஆவரங்கால்)

திருமதி இளையவர் பொன்னாச்சி நேற்று (3-12-95) மட்டுவில் தெற்கில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இளையவரின் அன்பு மனைவியும், சின்னம்மா, இலட்சுமி, இளையபிள்ளை, வைரமுத்து. இராசமணி, செல்வநாதன் (கனடா - முன்னாள் விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கிருஷ்ணர், சின்னத்தம்பி, செல்லக்கண்டு, சந்திரமலர், மகாலிங்கம், செல்வசாந்தி (கனடா) ஆகியோரின் மாமியாரும், பத்மராஜா (கனடா), தர்மராஜா (நெதர்லாந்து), குணராஜா (கனடா), ஸ்ரீராகவன், மங்களவதனி, சுகந்தினி, திருச்சந்திரன், சபேசன், விமலச்சந்திரன் (ஜேர்மனி), கருணாகரன் (மாணவன், தொழில் நுட்பக் கல்லூரி), பிருந்தா, சகுணஸ்வதி (லெபனான்), பகுணஸ்வதி, ரவிச்சந்திரன், வனஸ்வதி, ரவிக்குலன் (பிரான்ஸ்), கோமதி (இந்தியா), சுதாகரன், செந்தூரன், பிரகலாதன், அனுராதா, நகுலேஸ்வரன், மயூரன், கஸ்தூரன், கரன், ஆதவன், சங்கீதா, ரமணன், கார்த்திகா, நர்மதா, அகிலன், திவ்வியா (கனடா), சிந்தியா (கனடா), காயத்திரி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (4-12-95) மட்டுவிலில் நடைபெறும்.

தகவல்:
சி. ஸ்ரீராகவன்
(பேரன்)

மே. பா:
சி. மகேஸ்வரி
மருதங்குளம்,
வளர்மதி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(39450)

## சின்னையா செல்லத்துரை

(ஓய்வுபெற்ற வன பரிபாலன உத்தியோகத்தர்)

அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கு, பிராமண ஓடையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா செல்லத்துரை அவர்கள் (3 - 12 - 95) நேற்று இறைபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற சின்னையா — தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், ஓய்வுபெற்ற ஆசிரியை அன்னமுத்து (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், கதிரவேற்பிள்ளை, திருமதி பாக்கியம் கந்தசாமி, திருமதி திலகம் குலசேகரம், தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான திரு. கந்தையா (விஷகடி வைத்தியரும் ஓய்வுபெற்ற அதிபரும்), வினாசித்தம்பி, செல்லம்மா, தங்கம்மா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (4 - 12 - 95) திங்கட்கிழமை மீசாலை வடக்கில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
Dr. (Mrs.) ஜெ. ஸ்ரீஸ்கந்தராஜா
(யாழ். பல்கலைக் கழகம்)

த. முகவரி
மே. பா:
திரு. க. கனகசபை (கிளி)
நில அளவையாளர்,
டச்சு வீதி,
மீசாலை வடக்கு.

(39324)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org